உ

கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி-சஅ.] நந்தன-ஸு புரட்டாசி—ஐப்பசி-மீ [பகுதி. கக-கஉ.

Vol. 48. September—November 1952 No. 11-12.

திருக்குறள்

திரு, நா. அப்பனையங்கார், தலைமையாசிரியர், தமிழ்ச்சங்கக் கலாசாலை.

வேத முதனூல் விரித்த பொருள்குறுக்கிப்
போது குறணூற் பொருள்விரியை—ஓத
அளிக்கும் திருக்குறளாய் அன்றுலகந் தாவிக்
களிக்கும் நெடுமால் கழல்.

வடமொழி வேதமாகிய முதனூல் தான் முன்பு விரித்துரைத்த பொருளைத் தன்னுள் மிக அடங்கி ஒடுங்குமாறு குறுக்கிக்கொண்டு, அக்காரணத்தால் குறள்நூல் என மறுபெயர்பூண்டு தமிழுலகத்துப் போந்தது; அதன் விரிந்த பொருளை ஓதுதற்கு, குறளுருவாய் முன்பு அவதரித்துப் பின்பு மூவுலகும் ஈரடியால் தாவியளந்து களிக்கும் நெடுமாலின் கழல்கள் காப்பாக அளிசெய்யும்: என்பது இவ் வெண்பாவின் பருப்பொருள். திருக்குறளாய் அன்று உலகம் தாவிக், களிக்கும் நெடுமால் கழல், வேதமுதனூல் விரித்தபொருள் குறுக்கிப் போது குறள்நூல் பொருள்விரியை ஓத அளிக்கும்; எனக் கூட்டி வினைமுடிவு செய்க.

வேதம் தானே, திருக்குறள் என்றபெயரால் வேறுபோந்தது என்பதாம். எனவே, இரண்டும் ஒன்றேயன்றி வேறல்ல என்பது இனிது விளங்கும். முன்பு அலகிலவாய் விரிந்து பரந்த வேதம், பின்பு அடங்கியொடுங்கிக் குறள்வடிவாற் போந்த காரணத்தால், குறள் என்று பெயர்வாய்ந்ததாயிற்று என உய்த்துணரற்பாலது.

என்னை? குறள்வெண்பாக்களால் இயன்றமையால் அந்நூல் குறள் எனப் பெயர்பெற்றது என்பதே உலகினர் பலர்க்கும் ஒப்ப முடிந்தது; குறுகின வடிவுகொண்டமையால் அது குறள் எனப் பெயர்பெற்றதென்று இங்ஙனம் வேறுகாரணம் கற்பித்தல் வேண்டற்பாலதன்றே? எனின்; ஒக்கும். உலகத்தார் பலரும் உடன்பட்டதனை இல்லையெனற்கு எழுந்ததன்று இவ்வுரை என்பது.

மற்று என்னையோ கருத்து? எனில்; கூறுவேன். யாதானுமொரு நூலின் பெயர்க்காரணம் ஒன்றேயாக அமையவேண்டும் என்னும் வரையறை இன்று. அப் பெயர்க்காரணம் எத்துணைப் பலவாயினும், பொருத்தமுளவேல் அத்தனையும் கொள்ளத்தகும். ஒன்றே போதும் ஏனைய வேண்டா என்று தள்ளத்தகுவன அல்ல. ஆகையால் இங்குத் திருக்குறள் நூலுக்கு அப் பெயர்க்காரணம் வேறுகூறியதும் வேண்டற்பாலதே என்பது.

இனி, அப் பெயர்க்காரணமே பெரிதும் வாய்ப்புடையதென் பதும் சிறிது விரித்துரைக்கத்தக்கது. குறட்பாவான் இயன்றமையாற் குறளாயிற்றெனின், அது யாப்பின் பெயர் நூலுக்காயிற்றும். ஆகவே சினையின் பெயர் முதலுக்கான ஆகுபெயராய், 'குறிப்பிற்றோன்ற'லாய் அடங்கும். முதனூலினின்று முழுவடிவும் குறுகினமையாற் குறளாயிற்றெனின், ஆகுபெயரான குறிப்புப் பொருள் கொள்ளவேண்டாது, வெளிப்படைப் பொருளான 'தெரிபு வேறு நிலையலாய்' விளங்கித் தோன்றும். வெளிப்படை குறிப்பு ஆகிய இருவகைப் பொருள் நிலைகளில், வெளிப்படைப் பொருளுக்கு ஏலாவிடத்துமட்டுமே குறிப்புப்பொருள் கொள்ளப்படுவதன்றி வெளிப்படைப் பொருளுக்கு ஏற்குமிடங்களிற்கூடக் குறிப்புப்பொருளே கொள்ளவேண்டுமென்னும் நியமமின்று. அதனால் திருக்குறளென்பது யாப்பின் தன்மைபற்றி நூலுக்கான பெயரெனக் கொள்வதைக்காட்டிலும், நூலின் தன்மைபற்றியே நூலுக்கான பெயரெனக் கொள்ளுதல் எத்துணை வாய்ப்புடையதென்பது சொல்லாமலே விளங்கும்.

நூற் பெயர்க் காரணங் கூறுமிடத்து,

'முதனூல் கருத்தன் அளவு மிகுதி
பொருள்செய் வித்தோன் தன்மைமுதல் நிமித்தினும்
இடுகுறி யானுநூற் கெய்தும் பெயரே'

என நன்னூல் இலக்கணம் வகுத்துளது. அவ் விலக்கணத்தில், நூல் தன்மையாற் பெயர்பெறுதல் 'தன்மை' என்ற எடுத்தோத் தாலும், தன் யாப்பாகிய பாவகையாற் பெயர் பெறுதல் 'முதல் நிமித்தினும்' என்ற உய்த்துணரவைத்தலாலும் கொள்ளக்கிடந் தன. எடுத்தோத்தான காரணம் ஏலாவிடத்துமட்டுமே, உய்த் துணரவைப்பான காரணம் கொள்ளவேண்டு மென்பது ஒருதலை. ஆகையால் இங்ஙனம் கூறிய திருக்குறட் பெயர்க்காரணம் சாலச் சிறந்ததென்பது இதனாலும் விளங்கும்.

மற்று கலித்தொகை, நாலடியார், வெண்பாமாலை, ஆசிரிய மாலை, திருவாசிரியம் என்பனவெல்லாம் தத்தம் யாப்பினாற்பெற்ற பெயராதல் போல, திருக்குறள் என்பதும் அவ்வகை யாப்பினாற் பெற்ற பெயராதல் வாய்ப்புடைத்தாகாதோ? எனின்; ஒக்கும். அந் நூற்பெயர்களுக்கு யாப்பினாற்பெற்ற காரணமன்றிப் பிறி தொரு காரணம் கொள்ளக்கிடப்பதின்று. அதனால் அவை அவ் வொருகாரணமே உடையன. திருக்குறள் அன்னதன்றி, நூலின் தன்மையாற்பெற்ற காரணமும் சிறப்ப வாய்ந்துளது. ஆகையால் அந் நூல்களின் பெயர்வாய்ப்பைக் காட்டிலும் திருக்குறளின் பெயர் வாய்ப்பு இருமடங்கு சிறந்து மிகமிக அருமையுடையதென்க.

இனி, இப் பெயர்க்காரணத்தில் வேறொரு வாய்ப்பும் அருமை யாக அமைந்துளது. சினையாற் குறுகலுடைய ஒரு பொருள் தன் முழுமுதலாலும் குறுகல் இன்றியமையாதது. முதலும் சினையும் பொருள்வேறுபடா என்பர். ஆகலின், இரண்டன்பாலும் ஏற்றத் தாழ்ச்சியின்றி 'ஒப்பு' என்னும் இலக்கணம் அமைதல் வேண்டும். அங்ஙனமன்றி, உறுப்பியாகியபொருள் குறுகாமல் உறுப்புக்கள் மாத்திரம் குறுகி, இழுக்கியதொரு விகாரவடிவம் உலகியலில்மட்டு

மன்றி ஒருவர் உள்ளத்துள்ளும் நிகழ்தல் இயலாத இல்பொருளா கும். ஆகவே அவயவமெல்லாம் குறள்யாப்பினுலியன்ற அவயவியா கிய நூலும் குறளாய் இயலுதல், எத்துணை அழகும் அருமையும் வாய்ந்ததென்பது சொல்லவேண்டுமோ? என்க.

என்னை? ஓரடிமுக்காலாகிய பாவினைக் குறளென்றல் பொருந் தும்; அன்றி முப்பாலாய் விரிந்து ஆயிரத்தின் மேற்பட்ட பாக்க ளாய் அகன்று பரந்த நூலினைக் குறள் என்றல் அமையாதாம் பிற எனின்; அறியாது சொல்லினை. அலகிலவாய்ப் பரந்துகிடந்த நான்மறைகள், தம் பொருளனைத்தும் அடங்கி ஒடுங்குமாறு முப் பாலாய் ஆயிரத்து முந்நூற்று முப்பதேயான அருங்குறளுருவம் வாய்ந்து நிகழ்தலின், அம் முதனூற்பெருமை நோக்க இதன் குறுமை அளவிடலரியதாய் நுணுகித்தோன்று மென்பது.

எனவே திருக்குறள் என்ற பெயர், யாப்பினுற் பெற்றதே யன்றி, தன்மையாற் பெற்றதும் ஆம் என்பது முடிந்தது. குறட் பாவானியன்றமையாற் குறளாயிற்று என்பதுபோலவே, நூல் முழுதும் குறுகியுள்ளமையாற் குறளாயிற்று; என்பதும் ஆசிரியர் கருத்தாதல் சிறிதும் ஐயமின்று. அல்லாக்கால் அவர் குறள் வெண்பாவினைத் தேர்ந்தெடுத்து நூல்யாத்தமைத்ததில் சிறந்த பயனின்ருய் ஒழியுமன்றே?

அஃதேல், திருக்குறட்பெயர்க்கு இருகாரணங்களும் இயை வன வாகுக. ஆயினும் வேதத்தோடு திருக்குறளிடை வேற்றுமை பெரிது; தன்னை இயற்றினர் ஒருவரை இல்லாதது மறை; தன்னை இயற்றினர் ஒருவரை உடையது குறள்; ஆகலின் வேதம் தானே குறுகிக் குறளாயிற்றென்றல் என்னை? எனில்; கூறுவேன்.

தன்னைப் பிறப்பித்தாரில்லாத இறைவன் உலகின்கண் ஒரு தாய் வயிற்றிற் பிறப்பதுபோல, தன்னை இயற்றினரில்லாத மறையும் தமிழுலகில் வள்ளுவர்வாயிலாக மறுபிறப் பெய்திற்றென்று கொள்ளத்தகும். பரம்பொருள் இராமனுக அவதரித்தகாலத்து, வேதமே இராமாயணமாக அவதரித்தது; என்றாற்போன்ற ஆசிரிய வசனம் இங்கே கருதத்தக்கது. வேதமும் வேதத்தின் உட்பொரு ளாகிய இறைவனும், ஒரு நிமித்தத்தால், ஒருங்கு தோற்றஞ்செய்து

உலகத்தை உய்விக்கும் முறைமை இது. பிரமாணம் பிரமேயம் ஆகிய இரண்டும் இங்ஙனம் ஒருதன்மையாக அவதரிக்கும் அதிசயம்தான் என்னே! திருக்குறளும் அன்னதொரு வேதபுருடன் அவதாரமே என்பதில் ஐயமில்லை. இவ் வுண்மைக்கு, குறட்பெயரினைச் சாரவழங்கும் 'திரு' என்னும் அடைமொழியே சிறந்த கரியாமென்பது.

இம் மெய்ப்பொருள் எல்லாம் விளங்குதற் பொருட்டே, மேல் வெண்பாவின் பிற்பாதியில்,

—ஓத
அளிக்கும் திருக்குறளாய் அன்றுலகந் தாவிக்
களிக்கும் நெடுமால் கழல்

என இறைவன் திருவவதாரத்தோடு திருக்குறள் நூலுக்கு உவமை கொள்ளுமாறு உய்த்துணர வைத்தது என்க. திருக்குறளின் சிறப்புப்பாயிரமாக அமைந்த திருவள்ளுவமாலையில், இன்னோரன்ன கருத்துக்கள் மிகப்பயின்று வருவன.

'மாலுங் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியால்
ஞால முழுதும் நயந்தளந்தான்'

எனவும்,

'தானின்ற தொங்கலாய் காசிபனூர் தந்தமுன்
கூனின் றளந்த குறளென்ப'

எனவும் வருவன போன்றவை கண்டுகொள்க. அவை எல்லாவற்றையும் இங்கே விரிப்பது மிகை. ஆகவே, இக் கூறியனவெல்லாம் தொல்லாசிரியர் துணிவாதல் நன்கு விளங்கும் என்பது.

இனி, மேல்வெண்பாவினின்று வெளிப்படும் வேறொரு பொருளும் இங்கு விரித்துரைக்கத் தக்கது. அச் செய்யுள் முன்பாதியில் 'வேதமுதனூல்' என்பதற்கு வேதமாகிய முதனூல் எனப்பொருள்கோடலன்றி, வேதமும் அது முதலாகிய வேறுநூல்களும் எனப் பொருள்கொள்ளலும் பொருந்தும். அவை வேதம், உபநிடதம், இதிஹாஸம், புராணம், தரும

சாத்திரம் என்பவும் பிறவுமாம். 'பாரதம் சிராம கதை மனுப் பண்டை மறை' என ஆன்ருேர் கூறியதும் நோக்குக. அவை யெல்லாம் சேரவிரித்த பொருள்கள் அனைத்தையும் குறுகுமாறு செய்துகொண்டு போதுவது திருக்குறளின் விரிபொருள் என்க.

என்சொல்லியவாறே? எனின்; வேத முதலிய நூல்களின் விரிபொருளைக் குறுகச்செய்து, திருக்குறளின் விரிபொருள் மேன் மேற் பெருகி வளராநிற்கும் என்பதாம். இதுவும் ஓர் நயம். இப் பொருளமைதியை உட்கொண்டே,

> 'எல்லாப் பொருளும் இதன்பா லுளஇதன்பால்
> இல்லாத எப்பொருளும் இல்லையால்'

எனவும்,

> 'ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்
> பாயிரத்தி னொடு பகர்ந்ததற்பின்—போயொருத்தர்
> வாய்க்கேட்க நூலுளவோ'

எனவும் ஆன்ருேர் கூறிவைத்தார் என்பது.

இனி, 'வேதமுதனூல்' என்று தொடங்கும் மேற்குறித்த வெண்பா, திருக்குறளின்விரிபொருள்பற்றி இனிமேல் இங்குவேறு வேறு எழுதப்புகும் கட்டுரைக்கெல்லாம் முன்னதாக, வழிபடு தெய்வவணக்கம் கூறிக்கொண்டது என்க; ஏற்புடைக் கடவுள் வாழ்த்தாக ஒருவாறு இயைத்துக்கொள்ளலும் ஆம். இது நிற்க.

இவ்வாறு தெய்வமும் வேதமும் சார்த்தி, திருக்குறட் புகழ் சாற்றுதல் இந்நாளிற் சில தமிழன்பர் வேண்டாமையும் உண்டால்; எனின், அஃது உண்மையே. ஆயினும், அந்நூற் சிறப்பைப் பிறி தொருவகையாற் பேசிப் புகழ அவரும் உடன்படாதாரல்லர். அங் ஙனமே, அவரவர் மனப்படுமாற்ருல் அதன் பெருமையைப் பேசி இன்புறுதற்கண் யாவரும் ஒத்த உரிமையர். ஆகலின் அது கொண்டு, பண்டை மரபு பிறழாத தண்டமிழ்ச் சான்ருேர் பிறரும் சென்ற நெறியினைப் பின்பற்றி, வழிபடு தெய்வத்தை வழுத்துமுக மாக இத்துணையும் எழுதப்பெற்றதன்றிப் பிறிதன்று என்பது.

ஸ்ரீ:

கம்பரும் துளஸிதாஸரும்

திரு. தி. சேஷாத்திரி அவர்கள், M.A. ஆசிரியர், மதுரைக்கல்லூரி, மதுரை.

சின்னாட்களாகவே, கம்பரது 'இராமாவதாரப்பேர்த் தொடை நிரம்பிய தோமறு மாக்கதை'யைத் துளஸிதாஸர் கேட்டிருக்க வேண்டும் என்ற எண்ணம் பரவிவருகிறது. அதற்குச் சில சான்றுகளும் உள்ளன.

துளஸிதாஸர் பெரிய இராமபக்தர். "நிர்க்குணப்பிர்ம்மத்"தின் தன்மை அறிந்தவரேயாயினும், உருஎடுத்த பரமனிடம் அன்பு செலுத்தி வாழ்வுக்கடலை நற்பெயர் நாவாய்கொண்டு நீந்தி, அவன் நற்குணக்கடலாடி உய்தற்குரிய பத்திநெறியில் நம்பிக்கை கொண்டவர்.

அவர் கடவுள்தம்மிடம் செய்த அன்பு ஆண்டான் - அடிமைத் திறத்தை அடியொற்றியது. நற்பெயருக்கு உள்ள 'மந்திர' வலிமையை நன்கு அறிந்தவராதலால், 'இராம' என்ற பெயரை ஏந்தி நிற்கும் பரம்பொருளை அவர்தம் ஆண்டானாகக் கொண்டார்; தாம் அவருக்கு அடிமையானார். அடிமை என்றால் அடக்கமும் வணக்கமும் வேண்டும். ஆண்டான் என்றால் ஆளும் குணத்திற்கு அடிப்படையான கடும்சொல்லும் சுடுவழியும் கொண்டிருப்பது இயல்பு. ஆனால் துளஸி, தன்னுடைய ஆண்டான் - அடிமைத் தொடர்பை ஈரடிச் செய்யுள் ஒன்றால் அருமையாக விவரிக்கிறார்.

வணங்கியும் கேட்கமாட்டான், தருவதைப் பணிந்தும் ஏற்கமாட்டான்; அப்படி ஒரு அடிமை. அதற்கு ஒரு எடுத்துக்காட்டாக சாதகப்புள்ளைப் பேசுகிறார் துளஸிதாஸர். "அப்படிப்பட்ட புள்ளுக்கும்கூட மேகம் நீர் அருளுகிறது. மேகத்தின் தன்மையை எப்படிப் புகழ்வது? அந்தப் புள்ளுக்கு மேகம் தவிர்ந்தால் எது

தான் உதவும்" என்று வியக்கிறார். அந்த உதாரணத்தைத் துளஸிதாஸர் - இராமன்மேல் ஏற்றிச் சிறிது இன்புறலாம். "மின்னிப் பரவும் மேகத்தை" உருவம் கறுத்த ஊழி முதல்வனுக்கு ஒப்பிட்டால் அதில் உருவஒற்றுமை மட்டுமல்ல, குண ஒற்றுமையும் மனத்தைக் களிப்பிக்கிறது. துளஸிதாஸர் பறவையைப்போல் நிற்காமல், தங்காமல் பறக்கிறார்; பரபரக்கிறார். ஆனால் ஒரு நற்குணம் அவரிடத்தில் இருக்கிறது. இராமன் அருள் தவிர வேறொன்றையும் அவர் ஏற்கமாட்டார். இந்தத் திட்பத்தை உணர்த்த ஒரு கதைகூடச் சொல்லப்படுவது உண்டு.

குழலூதி உயிரைக் கொள்ளையிட்டுப் பதம்தந்த அழகன்-கிருஷ்ணன் அவதரித்த ஊரான வடமதுரைக்குச் சென்ற துளஸிதாஸர் 'இராமனுருவத்தில் அன்றி வேறுருவத்தில் நான் தரிசனம் வேண்டேன்' என்று சொல்லிவிட்டார். பரமனும் மனமுவந்து தன் உருவத்தை மாற்றி, கோதண்டம் தாங்கி, இளையபெருமாளுடனும், பொய்யோ எனும் இடையாளுடனும் தரிசனம் தந்தானும்.

அந்தவிதம் இராமனையே தலைவனாகக் கொண்டதற்கும் ஒரு காரணம் உண்டு. இராமன் சீலம், சௌந்தர்யம், சக்தி என்ற நற்குணம், முருகு, வீறு மூன்றிற்கும் தெய்வம். ஆண்டான் என்றால் மூன்று குணங்களும் பொருந்தியிருக்கவேண்டும். ஒரு குணம் குறைந்தாலும் அவனை நேசிக்கலாம்; காதலிக்கலாம்; காப்பாற்றலாம்; ஆனால் அடிமைசெய்ய இயலாது.

அந்த இராமனுடைய குணங்களைச் சுவைக்கவேண்டி இராமனுடைய மாக்கதையைச்சொல்லி அனுபவிக்கத் துளஸிதாஸர் முற்பட்டார். அந்த நிலையில் தான் அவருக்கு இராமனுடைய பல கதைகளையும் பலர் வாயிலாகவும் பல நூல்கள் வாயிலாகவும் தெளிய ஆவல் எழுந்தது. தயாதன் மகனாய்ப் பிறந்து மிதிலைமன்னன் மகளை மணந்து, பிறகு அவளை விட்டுப் பிரிந்து கண்கலங்கி அழுது அலைந்த இராமனை அவர் பரம்பொருளாகவும் கண்டார்; தன்னுடைய ஆண்டானாகவும் கண்டார். அவர் அதை அங்கங்கே தன் 'ராமசரிதமானஸத்தில்' அழுத்தமாகக் கூறியிருக்கிறார்.

துளஸிதாஸர் இராமனுடைய கதைகளை(லீலைகளை)ப் பலர் வாயிலாக அறிந்தார் என்றேரும். அதை அவரே ராமசரிதமானஸத்தின் ஆரம்பத்தில் வடமொழிச்சுலோகம் ஒன்றின் வாயிலாகச் சொல்லியிருக்கிருர். 'வால்மீகியினுடைய இராமாயணத்தில் சொல்லப்பட்டதைத் தவிர மற்றத் துறையிலும் தெரிபவந்ததைக் கொண்டு துளஸிதாஸர் தன் ஆன்மசுகத்துக்காக இந்த ராமசரிதமானஸத்தை எழுதியிருக்கிருர்' என்று.

மற்றத்துறையில் என்பதை 'ஹனுமந்நாடகம்' 'சம்பூராமாயணம்' என்ற வடமொழியில்உள்ள நூல்களைக்குறிக்கும் வாசகமாக வடநாட்டினர் கொள்கின்றனர். ராமசரிதமானஸத்தில் சொல்லப்படும் சில நிகழ்ச்சிகள் காணப்படும் காரணத்தால் அந்த நூல்கள் குறிக்கப்படுகின்றன. உதாரணமாக, கங்கையைத் தாண்ட வேண்டிய இடத்தில் இராமன் குகனைப் படகுகொண்டுவரப் பணிக்கும் கதை வருகிறது. குகன் மறுத்துவிடுகிருன். என்ன காரணம் என்ருல், அவன் மிக அழகாகச் சொல்கிருன்: 'எம்பெருமானே! உம் காலிலுள்ள தூசியின் தன்மை தெரியாதா? கல்லையே பெண்ணாக்கி விட்டதே! என் படகுகளோ மரத்தாலானவைதானே! ஏதாவது ஆகி விட்டால் என்ன செய்வேன்? ஆகவே நானே தங்கள் கால்களைக் கழுவிச் சுத்தம்செய்து விட்டால்தான் உங்களைப் படகில் அச்சம்இன்றி ஏற்றமுடியும் இந்த விஷயத்தில் இலக்குவன் கோபம்கொண்டால்கூட நான் தளர்வதற்கில்லை'; என்கிருன்.

இதற்கு ஆதாரம் சம்பூராமாயணத்திலுள்ள ஒரு சுலோகத்தில் இருக்கிறது. 'கல்லைவிட மரம் கடினமா?' என்று வினவும் ஒரு சுலோகமேதான் இந்த அழகிய, மிகச் சீரிய கருத்தை உள்ளடக்கிய இந்தக்கதைக்கு அடிப்படைத் தூண்டுதலாக அமைந்தது.

இவ்விதம் நிகழ்ச்சிகளின் ஆதாரம் அந்த நூல்களை எல்லாம் துளஸிதாஸர் பார்த்திருக்கவேண்டும் என்ற கூற்றுக்குச் சான்ருகும் என்ருல், அதேபோல் மற்ருெரு நிகழ்ச்சி கம்பரது இராமாவதாரத்தைக் கேட்டிருக்க வேண்டும் என்பதற்குச் சான்ருகும். அந்தச் சான்றே போதவும் போதும்.

துளஸிதாஸர் கம்பரது இராமாவதாரத்தைப் படித்திருக்க முடியாது; ஆனால் கேட்டிருக்கவேண்டும் என்பதற்குச் சான்று தரும் அந்த நிகழ்ச்சி இது தான்:—

கோசிக முனிவருடன் மிதிலைசெல்லும் இராமனும் அவர் தம்பியும் மிதிலை சுற்றிப்பார்க்கும் கதை யாவரும் சொல்வதுதான். ஆனால் இராமன் சீதையைப் பார்ப்பது, அதாவது மணத்துக்கு முன் ஒருமுறை கண்டு இருவரும் இதயம் மாறிப்புகுவதும் ஏங்கிப் புலம்புவதும் கம்பன் சொல்லும் கதையில்தான் வருகிறது. இதே கதையைத் துளஸியும் சில மாறுதல்களுடன் சொல்லிச் சுவைக்கிறார். ஆகவே அவர் கம்பராமாயணத்தைக் கேட்டிருத்தல் வேண்டும் என்று துணிந்து சொல்லிவிடலாம்.

மேலும் சிலஇடங்களில் சிலவாக்கியங்களே மிகப்பெரிய கருத்துக்களை உள்ளடக்கி ஒன்றின்ஒன்று மொழிபெயர்ப்புக்கள்போல் அமைந்திருக்கின்றன. அவைகளைக்கொண்டு நாம் இந்தக்கூற்றை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

ஆனால் எவ்வாறு கேட்டிருப்பார்? யாரிடம் கேட்டிருப்பார்? என்ற கேள்விகள் எழுகின்றன. அதற்கும் தக்கபதில்கள் கிடைத்துவிட்டால், சரித்திரபூர்வமான ஆதாரங்களுடன் அந்தப் பதில்களும் நிரூபிக்கப்பட்டுவிட்டால், நாம் அந்தக் கூற்றை நிச்சயமாக நம்பிவிடலாம்.

குமரகுருபரர் என்ற பெரியாரைத் தமிழ்நாடு நன்கு அறியும். அவர் காசியில் சென்று வசித்ததும், டில்லியில் சென்று பாதுஷாவின் விருப்பத்திற்கிணங்கக் கலைமகள் அருளால் பதினைந்தே நாட்களில் ஹிந்துஸ்தானிமொழி கற்று அவனுடன் பேசியதும் நாம் அறிந்தவை. அவரைத் துளஸிதாஸர் கண்டு பேசினர்; அவரிடம் இராமாயணம் கேட்டார் என்பது ஒரு சாரார் சொல்லாகும்.

அதை நாம் நம்பலாம். இருவரும் ஏக காலத்தில் வசித்தவர்; இருவரும் காசியில் சந்தித்தனர்; குமரகுருபரர் அங்கே கம்பராமாயணத்தை ஹிந்துஸ்தானியில் சொன்னார்; என்னும் விஷயங்களை நாம் அறிந்தால் பிறகு துளஸிதாஸரில் கம்பன் பிரதிபலிப்பதைக்கண்டு வியப்பெய்த வேண்டாம்.

*சமீபத்தில் S. M. வீரப்பன், B. A., L. L. B. என்பவரால் தொகுக்கப்பட்டு "பரிசுத்த காசிமாநகரம் படங்களில்" என்ற ஒரு சிறிய, அழகிய, மதிப்புயர்ந்த புத்தகம் வெளியாயிருக்கிறது. அதில் மூன்றும்பக்கத்தில் 6-ம் படமாக "கேதார் காட்" என்ற கட்டடத்தின் படம் இருக்கிறது. அதன் கீழே பின்வரும் குறிப்புக் காணப்படுகிறது:—

> "இந்தக் கட்டடத்துக்கும் கேதார் ஸ்ரீகோவிலுக்கும் உரிமை பூண்டது குமாரஸ்வாமி மடமாகும். அது கட்டடத்திற்கு அருகே அமைந்திருக்கிறது. அதைத் தென்னுட்டிலுள்ள திருப்பனந்தாள் மடம் நடத்திவருகிறது. இந்த மடத்தை முதலில் நிறுவியவர் ஸ்ரீலஸ்ரீ குமரகுருபரர் என்ற இளம் சந்நியாசியாவார். அவர் வாழ்ந்தகாலம் 1625—1688-ஆம் ஆண்டுகள் ஆகும். அவர் காசியில் தங்கி அடிக்கடி துளஸிதாஸருடன் அளவளாவி வந்தார் ...."

மேலே அவர் ஔரங்கசீப்பைச் சந்திக்கச்சென்றதுபற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

துளஸிதாஸர் வாழ்ந்துவந்த காலமும் அதுவேதான். அவர் அப்பொழுது வயதில் பெரியவராயிருந்திக்கவேண்டும். ஆனுல் 'ராமசரிதமானஸ'த்தை இந்தச் சந்திப்புக்குப் பிறகுதான் எழுதியிருக்கவேண்டும் என்று துளஸிதாஸர் வாழ்க்கைவரலாறுகளிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

ஆகவே துளஸிதாஸர் கம்பராமாயணத்தைக் குமரகுருபரர் மூலம் கேட்டு, அதிலிருந்தும் தமது ராமசரிதமானஸத்திற்குச் சில பகுதிகளை எடுத்துக்கொண்டார் என்று நாம் கருதலாம்.

---

*The Holy Banares in Pictures; compiled by S. M. Virappan B. A., L. L. B. Sigra, Banares.

கம்பரும் குமரகுருபரரும்

இதன் முன்புள்ள 'கம்பரும் துளஸிதாஸரும்' என்பது ஓர் இனிய கட்டுரை. குமரகுருபரரும் துளஸிதாஸரும் ஒரு காலத்தவர். இருவரும் வடநாட்டில் ஒருவரையொருவர் அறிந்திருந்தார்கள். அப்பொழுது துளஸிதாஸர் குமரகுருபரர் வாயிலாகக் கம்பருடைய இராமாவதார காவியத்தைக் கேட்டிருத்தல் வேண்டும். இது அக் கட்டுரையாளரின் தேர்ந்த முடிபு.

அவ் ஆசிரியர் திரு, சேஷாத்திரி அவர்கள், இம் முடிபைப் போதிய அகச்சான்று புறச்சான்றுகொண்டு தக்க அடிப்படையிலேயே நிலை நிறுத்தியுள்ளார்கள். ஆகையால் கம்பர் துளஸிதாஸர் ஆகிய இருபெருங் கவிஞர்களிடையும், மேலும் கருத்தொற்றுமைகள் மிகுதியாகக் காணப்பெறுவதில் ஐயமில்லை. அவை எல்லாவற்றையும் சேரத்தொகுத்து, அவர் நூற் கல்வி நிரம்பவுடைய அவ்வாசிரியரே வெளியிடுவதை இச் செந்தமிழ் பெரிதும் வேண்டி நிற்கின்றது. அதனால் தமிழிலக்கிய சரித்திரமே ஒரு புதிய ஒளி பெற்று இலங்குவதாகுமன்றோ? இது நிற்க.

சைவசமயச் சான்றோர்களிற் சிலர், சிவகதையல்லா அவகதைகளைக் கற்பது வாணாள் வீணாள் கழிப்பதாம் என்பர். இராமன் கதை கற்பதைக்கூட அவர்கள் அக்குற்றத்திற்கு இலக்காக்கிக் கூறியதும் உண்டு. ஆயினும் குமரகுருபரசுவாமிகள், அன்னவர் வரிசையிற் சாராது, மிகப்பரந்த பொதுநோக்கமைந்த ஓர் அருந் தமிழ்ப் பெருந்தகை ஆவர்.

அதனால் அவருக்குக் கம்பருடைய இராமாவதார காவியத்தில் எவ்வளவாக நன்மதிப்புண்டு என்பதைச் சிறிது ஆராய நேர்ந்தேன். அப்பொழுது, அத்துறையில் முன்னரே உழைத்து முடிவு கண்ட, ஸ்ரீமஹாமஹோபாத்யாய, தாக்ஷிணாத்ய கலாநிதி, டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களின் அரியதொரு ஆராய்ச்சிக் குறிப்பு எதிர்ப்பட்டு என் வேலையை எளிதாக்கிவிட்டது. அது, அவர்கள் தொகுத்து வெளியிட்ட 'குமரகுருபரசுவாமிகள் பிரபந்தங்கள்' என்ற புத்தகத்தில், ஆராய்ச்சிப்பகுதியில், 'கம்பராமாயணச் சொற்பொருளாட்சி' என்ற தலைப்பின்கீழ்க் காணப்பெறுவது.

அப்பெரியார் எழுதிவைத்த அப் பெறலரும் ஆராய்ச்சிக் குறிப்பை மேலைக்கட்டுரையோடு ஒருசேரவைத்து வாசிப்பது, செந்தமிழ் அன்பர்க்கு இன்பம்பயக்கும் என்று எண்ணினேன். அதனால் இங்கு அதனை அப்படியே பெயர்த்தெழுதுகின்றேன். மிகை பொறுத்திடுக. இனி அக் குறிப்பு வருமாறு:—

“தமிழ்க் காப்பியங்களுட் சிறந்த கம்பராமாயணத்தில் இம் முனிவருக்கு ஈடுபாடு அதிகம். காசியிலிருந்த காலத்தில் இவர் சிலசமயங்களிற் கம்பராமாயணப்பிரசங்கம் செய்துவருவதுண்டாம். இவருடைய செய்யுட்களில் கம்பருடைய கருத்துக்களும் சொல்லாட்சியும் விரவியிருக்கும். அவற்றுட் சில வருமாறு:

‘தகரக் குழலி னறையுகறை தருதீம் புகையுந் திசைக்களிற்றின்
தடக்கை நாசிப் புழைமடுப்ப’ (மீனா. பிள். 8)

என்னும் இவரது கற்பனை கம்பராமாயணத்தில் வரும்,

‘... ... ... பரிமள கந்தம்
மருப்புடைப் பொருப்பேர் மாதிரக் களிற்றின்
வரிக்கைவாள் மூக்கிடை மடுப்ப’ (கிந்தைப். 2)

என்பதை அடியொற்றி வந்தது.

சீதை இராமபிரானைக் கண்டமாத்திரத்தே காமுற்றதை,

‘கண்வழி நுழையுமோர் கள்வ னேகொலாம்’ (மிதிலைக். 55)

என்று கூறுவதாகக் கம்பர் அமைத்தார்; இவ்வாசிரியர்,

‘கண்பு குந்தென் கருத்து ளிருக்கவும்’ (மதுரைக். 10)

என்று தலைவி ஒருத்தி கூறுவதாகச் செய்யுள் செய்தார்.

‘உனது, முகத்தினழகெம் வடிக்கண்ணான்
மொண்டுண்டனம்’ (முத்து. பிள். 4)

என்பது,

‘இருந்தகுலக் குமரர்தமை யிருகண்ணின் முகத்தழகு
பருக நோக்கி’ (மிதிலைக். 157)

என்பதை நினைப்பிக்கின்றது.

'நமரங்காள்' என்னும் சொல்லை இவ்வாசிரியர் ஐந்து இடங்களில் உபயோகித்துள்ளார். அச்சொல் கம்பராமாயணத்தில் வானரர் களங்காண்படலத்திற் பல இடங்களில் வருகின்றது. கம்பர் அச்சொல்லை,

'நாகக் குன்றி னின்றன காண்மி னமரங்காள்'
'நளினக் காடே யொப்பன காண்மி னமரங்காள்'

என்பனபோல ஐந்துசீருள்ள செய்யுளில் அங்கே வைத்தார்; இவரும்,

'வெஞ்சம னஞ்ச வேலொ டெதிர்ந்தா னமரங்காள்' (சிதம்பரச். 40)

என அத்தகைய செய்யுளில் ஐந்தாஞ் சீராக வைத்துள்ளார்.

'வெள்ளி வீழிடை வீழ்த்தெனத் தாரைகள்
• • • •
வள்ளி யோரின் வழங்கின மேகமே' (ஆற்றுப். 4)

என்பது கம்பர் வாக்கு;

'மின்செய் கொண்மூ வெள்ளிவீழ் வீழ்ப்ப (சிதம்பரச். 44)

என்பது இவர் வாக்கு.

இவர் சில உவமைகளைக் கம்பர்செய்யுளிலிருந்து எடுத்தாண்டுள்ளார்:

'வறிஞ னோம்பிய செறுவொன் றேய்ப்ப' (பண்டா. 20)

என்று இவர் கூறும் உவமை,

'வையக முழுவதும் வறிஞ னோம்புமோர்
செய்யெனக் காத்து' (கம்ப. அரசியற். 12)

என்பதிலுள்ள சொல்லையும் பொருளையும் பெற்று அமைத்ததேயாகும்.

'வச்சை மாக்க ளெனவே முடவலவன்
வளைவா யடைக்கு மழைகாளே' (காசிக். 46)

என்று இவர் கூறிய கார்கால வருணனையும் அலவன் செயலுக்குக் கூறிய உவமையும்,

'இழைபடப் பெடையொடு மெள்ளி னள்ளிகள்
புழையுடைத் தொடுங்கின வச்சை மாக்கள்போல்' (கார்காலப். 121)

என்பதிலுள்ள வருணனையையும் உவமையையும் அறிந்து அமைத்தவையே என்பதில் ஐயமில்லை".

உ

சங்ககால மன்னர்கள்

வித்துவான் சு. குமாரஸ்வாமி ஆச்சாரி அவர்கள், M. A.
விரிவுரையாளர், தமிழ்க்கல்லூரி, மயிலம்.

ஆழிசூழுலகில் வாழும் மாந்தர்கள் பாழிலா இன்பம் படைத்திட, வீழுரு முயற்சியில் மேவுகின்றனர்; வெற்றியும் காண்கின்றனர். இவ்வனம் சீரும் சிறப்பும் எய்திச் செவ்விய நலமொடு வாழச் சிந்தைகொள்ளும் அவர்களுக்குத் தூண்டுகோலாய் விளங்குவது வரலாறு ஆகும். வரலாறு, முன்னோர்களது முயற்சி முயற்றின்மை ஆகிய இரண்டன் பயனையும் நன்கு விளக்குவதன்றோ? ஆதலின் வரலாறு காட்டும் வாழ்க்கை அனுபவத்தினை உளங்கொளக் கொண்டு தம் வாழ்க்கையில் துன்பம் நீங்கி இன்பத்தொடு வாழ மேற்கொள்வது, சிறந்த பயனைத்தருவதாம். வரலாறு, வாழ்க்கை வளர்ச்சியை நாகரிகத்தின் வளர்ச்சியைக் காட்டுவதாதலின், காலத்தொடு பொருந்திச் செல்லுதல் வேண்டும். நந் தமிழ்நாட்டுப் பண்டைய வரலாறு முழுமையும் நாம் உணரவியலவில்லை யென்பது மட்டுமன்று. கிடைத்துள்ள வரலாறும் காலத்தொடர்ச்சியாக அமையவில்லை. காலத்தொடர்ச்சியொடு வரலாறு அமையவில்லையாயின், கருத்தின் வளர்ச்சியை நாம் சரிவர அறிந்துகொள்ளுதல் இயலாதன்றோ? நந் தமிழ்நாட்டு வரலாற்றில் ஒருவாறு துணியப்பட்ட பகுதியிலேயே சாஸனங்களைக் கொண்டு காலத்தைக் கணிப்பதில் உள்ள இடையூறுகள் பல என்பதை நாம் அறிவோம். அத்தகைய வேறு கருவிகளின்றி, வெறும் நந் தமிழிலக்கியத் துணைகொண்டு தொடர்பாக வரலாறு உணர்த்துதற் கியலாத செய்யுட்களைக் கொண்டு பலவாகச் சிதறிக்கிடக்கின்ற பாக்களைக் கொண்டு, காலத்தை வரையறுத்துக்கொண்டு சங்ககால வரலாறு காண்பதென்பது எளிதினிலாவதொன் றன்று. எனினும், திருவாளர்கள்,

கனகசபைப்பிள்ளை, சிவராஜப்பிள்ளை, P. T. ஸ்ரீநிவாசையங்கார் முதலிய பெரியோர்கள் காட்டிய வழியே நுழைந்து, காலத்தொடு பொருந்தமுடியாதிருக்கின்ற வரலாற்றினை மக்கள்வாழ்க்கைக்கு வேண்டியதாகிய நெறியினைக் காலத்தொடு பொருந்திச் செப்ப விடைச் சிறுமதிகொண்டு துணிந்தனன். என் கருத்தின்படி, சங்க கால மன்னர்களது வரலாற்றினை முதலில் காலத்தொடு தொடர்பு படுத்திக் கூறிப் பின்னர் பிறர் கொள்கைபற்றி யெழும் தடை விடைகளைக் கூறுவல்.

1. அந்துவன்சேரலிரும்பொறை கருவூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்த ஓர் சேரமன்னன். ஓர்நாள் தனது நகருள் மதங்கொண்ட யானையூர்ந்து வந்துகொண்டிருந்த சோழமன்னன் முடித்தலைக்கோப் பெருநற்கிள்ளியைக் கண்டான். ஐயுற்று, தன் அருகிலிருந்த புலவர் உறையூர் ஏணிச்சேரி முடமோசியாரை நோக்கி, 'இவன் யார்'? என்றனன், அதனைச் செவியுற்ற புலவர் பெருமான் "......மறலி யன்ன களிற்று மிசையோன்......நோயில னாகிப் பெயர்கதில் லம்ம" என்று கூறி, மன்னனை வாழ்த்தினார். ஆதலின், இவ் விருமன்னரும் சமகாலத்தவ ராவர். (புறம். 13). இவர்காலத்திருந்தவன் ஆய் அண்டிரன் என்னும் வள்ளல். இப் புலவரே அவனையும் "கழல்தொடி ஆய்", "ஆய் அண்டிரன் அடுபோ ரண்ணல்" "வாய்வாள் அண்டிரன்", "மாரி யன்ன வண் கைத் தேர்வேள் ஆய்" என்றெல்லாம் சிறப்பித்துப் பாடியுள்ளார். துறையூர் ஓடை கிழார் இவ் வண்டிரனிடம் பரிசுபெற்றவர் (புறம். 136). இப் புலவர் பிறரைப் பாடவில்லை. முடமோசியார் அண்டிரனுக்குக் கையறுநிலையும் (புறம். 241) பாடியுள்ளார். இவ் வண்டிரனைப் பாடிய பிறபுலவர்கள் உளரெனினும், அவர்கள் இவனது வரலாற்றினை அகப்பொருட் செய்யுட்களில் உவமையாகக் கையாண்டிருக்கின்றனரே யன்றி, புறத்துறையில் இவனைப்பற்றி ஒன்றும் கூறவில்லை. ஆதலின் அப்புலவர்கள் இவ் வண்டிரன் காலத்தவரெனத் துணிந்துகூறல் இயலாது.

2. கபிலர், செல்வக் கடுங்கோ வாழி யாதனைப் புகழ்ந்து பாடியுள்ளார் (பதிற். 61—70); "கடந்தடு தானைச் சேர லாதனை, யாங்கனம் ஒத்தியோ வீங்குசெலல் மண்டிலம்" எனப் புறம். 8ல் போற்றியுள்ளார்; தன் கையைப்பற்றி 'மெல்லியவாமால் நுங்கை' எனக் கூறிய கடுங்கோவிற்கு, "சமந் தாங்கவும் மா தாக்கவும் சாப நோன்ஞாண் வடுக்கொள வழங்கவும், பரிசிலர்க்கு அருங்கலம் நல்கவும், வலியவாகும் நின்கை; கறிசோறு உண்டு வருந்துதொழிலல்லது பிறிதுதொழி லறியாவாகலின் நன்றும் மெல்லிய என் கை" எனக்கூறினர் (புறம். 14). குண்டுகட்பாலியாதனர் புறம். 387ல் "செருமிகு நோன்றாட் செல்வக் கடுங்கோ வாழியாதன்" என வாழ்த்துகின்றார். அச் செய்யுளில் இவனது தலைநகர் வஞ்சியென்றும் அந் நகர் பொருநைக் கரையி லுள்ளதென்றும், நெல்விளைவு மிக்க ஊர்களைச் சார்ந்துளதென்றும் குறிக்கின்றார். பதிற்றுப்பத்து ஏழாம்பத்துப் பதிகத்தால் இச் செல்வக்கடுங்கோவாழியாதன் தந்தை மேற்குறித்த அந்துவன்சேரலிரும்பொறை யாகலாம் எனப் பெறப்படுகின்றது. பதிற்றுப்பத்து எட்டாம்பத்துப் பதிகத்தால் இச் சேரலின் மைந்தன் பெருஞ்சேரலிரும்பொறை என்பதும் பெறப்படுகின்றது.

3. சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனும் சோழன் வேற் பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளியும் போர்ப்புறத்துப் பொருது, அரும்பெற லுலகம் புக்கனர் எனக் கழாஅத்தலையார் புறம். 62ல் கூறுகின்றார். இவ்வரலாற்றினையே பரணரும் புறம். 63ல் கூறுகின்றார். புறம். 368ல் உயிர்போகாதுகிடந்த நிலையில் தன்னைக் கண்ட கழாஅத்தலையார் அவன் குறிப்புணர்ந்து, அம்மன்னன் கழுத்திருந்த ஆரத்தைத் தன்னதாக்கிக்கொள்ள மன்னன்உயிர்நீத்தான். என்ற வரலாறு பெறப்படுகிறது. இக் கழாஅத்தலையார், சேரமான் பெருஞ்சேரலாதன் சோழன் கரிகாற்பெருவளத்தானோடு பொருது புறப்புண்நாணி வடக்கிருந்தானைப்பற்றிக் கையறுநிலைபாடியுள்ளார்.

(புறம். 65, 270, 288). குடக்கோநெடுஞ்சேரலாதனைப் பாடிய இவரே இச்சேரலாதனையும் பாடியுள்ளதால் இவ் விருவரும் ஒருவர் பின் ஒருவராகச் சேரநாட்டரசுரிமை யெய்தியவர் என்பது பெறப் படுகிறது. கழாஅத்தலையாரைக் கபிலர் பாடியிருக்கிறார். கழாஅத் தலையார் கூறிய வரலாற்றைப் பரணர் குறிப்பிடுகின்றார். கபிலபரணர் சமகாலத்தவரெனினும் கபிலர் பரணருக்குச் சற்று முந்தியவராகவே காணப்படுகின்றார். ஆதலின், குடக்கோநெடுஞ்சேரலாதற்கு முன்வனேயாவன் பெருஞ்சேரலாதன்; பரணர் அவனைப் பற்றி ஒன்றும் சொல்லாமையினால் நெடுஞ்சேரலாதன் கபிலரால் பாடப்பெற்ற செல்வக்கடுங்கோவிற்கு முன்னவனாகவோ சமகாலத்தவனாகவோ ஆகலாம்; இருவரும் வேளாவிக்கோமான் பதுமன் ஈன்ற மகளிரை மணந்தவர் ஆதலின்.

4. கண்ணகி காரணமாகப் பேகனைப் பாடியபுலவர்கள் கபிலர், பரணர், அரிசில்கிழார், பெருங்குன்றூர்கிழார் ஆவர். இவர்களால் பாடப்பட்ட மன்னர்கள் செல்வக்கடுங்கோவாழியாதன், குடக்கோநெடுஞ்சேரலாதன், வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளி, தகடூர் எறிந்தபெருஞ்சேரலிரும்பொறை, இளஞ்சேரலிரும்பொறை ஆவர். கபிலர், பாரி இறந்தபின் செல்வக்கடுங்கோவை அடைந்தவராதல் வேண்டும். (பதிற். 61). இவர் பேகனைக் குறுங்கலி யென்னும் துறையமைப் பாடியுள்ளார். (புறம். 143). அரிசில்கிழாரும் அத்துறையிலேயே பேகனைப் பாடியுள்ளார். (புறம். 146) பெருங்குன்றூர்கிழாரும் அத்துறையிலேயே அவனைப் பாடியுள்ளார். (புறம். 147) பரணர் பேகனைக் கொடைத்திறம் புகழ்ந்து பாடியுள்ளார். (புறம். 141, 14[illegible]); குறுங்கலியென்னும் துறையிலேயும் பாடியுள்ளார். (புறம். 144, 145). ஆதலின் பேகன், செல்வக்கடுங்கோவாழியாதற்குப் பின்னர் வாழ்ந்தவன் என்பதும், பெருஞ்சேரலிரும்பொறையின் அரசியல் நாளிற்றான் பேகனைப் புலவர்கள் திருத்தியிருக்கவேண்டும் என்பதும் புலவர்களது சமகாலநிலைமை

நோக்கும்பொழுது புலனும். குடக்கோநெடுஞ்சேரலாதனைப் பாடிய பரணர் கடலோட்டிய வேல்கெழுகுட்டுவனைப் பாடியுள்ளார். எனவே, பெருஞ்சேரவிரும்பொறையின் காலத்து இருந்தவனாக லாம் குட்டுவன். குட்டுவனுக்கு முற்பட்டவன் குடக்கோநெடுஞ் சேரலாதனும் பெருஞ்சேரவிரும்பொறைக்கு முற்பட்டவனாகிய செல்வக்கடுங்கோவாழியாதனுமாவர். செல்வக்கடுங்கோவுக்கு முற் பட்டவன் அந்துவன்சேலிரும்பொறை யாதலின் முடித்தலைக்கோப் பெருநற்கிள்ளிக்குப் பிற்பட்டவன் வேற்பஃறடக்கைப்பெருவிறற் கிள்ளியாவான்.

5. இளஞ்சேட்சென்னியைப் பாடிய புலவர்கள் ஊன்பொதி பசுங்குடையார், இடையன்சேந்தன்கொற்றனார், பரணர், பெருங் குன்றூர்கிழார் ஆவர். ஊன்பொதிபசுங்குடையார் புறம். 10 ஆம், 378 லும் சென்னியின் இயல்புகளைக் கூறுகிறார். "ஒன்னார் ஆரெ யில் அவர்கட் டாகவும் நுமதெனப் பாண்கட னிறுக்கும் வள்ளி யோய்" என அவரால் விளிக்கப்படும் அம் மன்னவன் சோழனுக் குரிய பாமுளூரெறிந்தான் எனப் புறம். 203 ஆம் பாட்டின் அடிக் குறிப்புக் கூறுகிறது. புறம். 370, 378 ஆம் பாடல்களின் அடிக் குறிப்பு, "செருப்பாழி எறிந்த இளஞ்சேட்சென்னி" எனக்குறிப் பதனாலும், இடையன் சேந்தன் கொற்றனார் என்னும் புலவர் "எழூஉத் திணிதோட் சோழர் பெருமகன், விளங்குபுகழ் நிறுத்த இளம்பெருஞ் சென்னி, குடிக்கட னாகலின் குறைவினை முடிமார், செம்புறழ் புரிசை பாழிநூறி வம்ப வடுகர் பைந்தலை சவட்டி, கொன்ற யானைக் கோட்டிற் றோன்றும், அஞ்சுவரு மாபின் வெஞ் சுர மிறந்தோர்" என அகம். 375ல் குறிப்பதனாலும் கோசருக்குத் துணையாகத் தன் நாட்டுப் புகுந்த வடுகரைத் துரத்திச்சென்று பாழியென்னுமிடத்தில் வென்றானென்பது பெறப்படுகிறது. போரிலே சிறந்தவனாக விளங்குதலால் பரணரும் பெருங்குன்றூர் கிழாரும் குறிக்கும் (புறம். 4, 266) உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி இவனேயாகலாம் என நினைத்தற் கிடனுண்டு. இச் செய் யுட்களை நோக்கின் பெருங்குன்றூர்கிழார் முதலில் இளஞ்சேட் சென்னியை யடைந்தவரென்றும் பிறகு இளஞ்சேரலிரும் பொறையை அடைந்தவரென்றும் விளங்கும். இச் சேட்சென்னி,

குடக்கோநெடுஞ்சேரலாதனோடு போர்க்களத்துப் பொருதுவீழ்ந்த வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளிக்குப் பிற்பட்டவனாகலாம். எனவே கடலோட்டிய வேல்கெழுகுட்டுவன் காலத்திலும் இளஞ்சேரலிரும்பொறையின் காலத்திற்குச் சற்று முந்தியும் இருந்தவனாதல் வேண்டும். பெருங்குன்றூர்கிழார் கடலோட்டிய வேல்கெழுகுட்டுவன் காலத்திற்குப் பின்னரும் வாழ்ந்தவராதல் வேண்டும்; பதிற்றுப்பத்துள் இளஞ்சேரலிரும்பொறையின் முன்னோர் செயலுள் குட்டுவன் செயலும் குறிக்கப்படுவதால்.

6 பரணர் அகம். 125ல் வாகைப்பறந்தலையில், பெருவளக்கரிகால் ஒன்பது மன்னரை வென்றனன் எனவும், அகம் 246ல் வெண்ணிவாயிலில் பதினொருவேளிரொடு வேந்தரை அறுத்தனன் எனவும், அகம். 376ல் கழார் முன்றுறையில் கரிகாலன் முன்னிலையில் புனல்பாய்ந்தாடிய அத்தியைக் காவிரியாறு வௌவியசெய்தியும் குறிப்பிட்டுள்ளார். நக்கீரர், "செல்குடி நிறுத்த பெரும் பெயர்க் கரிகால் வெல்போர்ச் சோழன் இடையாற்றன்ன" என அகம். 141ல் குறிக்கிறார். இக் கரிகாலனும் பொருநராற்றுப்படைத் தலைவனாக கரிகாலனும் ஒருவனே யாகலாம். உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னியின் மகன் கரிகாலன் எனப் பொருநராற்றுப்படை கூறுதலாலும், பரணர், நக்கீரர் ஆகியவர்களால் பாடப்பட்டிருத்தலினாலும், நக்கீரர் இவனைச் "செல்குடிநிறுத்தவன்" எனக் குறிப்பதனாலும் இது துணியப்படும். கழாஅத்தலையாராலும் கருங்குழலாதனாராலும் பாடப்பெற்ற கரிகாலன் இவனின் வேறானவன் என்பது மேற்கூறிய புலவர்கள் கால வைப்பு முறையினின்றும் புலனாம்.

7. கடலோட்டிய வேல்கெழு குட்டுவனது வீரத்தினைப் பரணர் மறக்களவழி என்னும் புறத்துறையமைந்த செய்யுளாற் பாடியுள்ளார் (புறம். 369). பதிற்றுப்பத்துள் ஐந்தாம் பத்தும் இக்குட்டுவனை இப்புலவர் பாடியதேயாம் என்பர். அம்மூவனார், கொல்லிக் கண்ணன், சாகலாசனார், நக்கீரர் மாமூலனார் ஆகிய புலவர்கள் குட்டுவனை அகப்பொருட்பாக்களில் அமைத்துப் பாடியுள்ளனர். இவர்களால் பாடப்பட்ட குட்டுவன் 'கடலோட்டிய வேல் கெழுகுட்டுவனா?' என்பது ஆராய்ச்சிக் குரியது.

8. அதியமான் அஞ்சியைப் பரணர்பாடினர். அப்பரணரால் பாடப்பட்ட மன்னர்கள் குடக்கோ நெடுஞ்சேரலாதன், குட்டுவன், வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளி, உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி கரிகாலன் ஆகியவர்கள். அரசில்கிழாரால் பாடப்பெற்ற மன்னர்கள் தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும்பொறை, பேகன், எழினி ஆகியவர்கள். ஔவையாரால் பாடப்பெற்றவர்கள் சேரமான் மாரிவெண்கோ, இராஜசூயம்வேட்ட பெருநற்கிள்ளி, கானப்பேர் தந்த உக்கிரப்பெருவழுதி ஆகியவர் ஆவர். அதியமான் அஞ்சிக்குப் பின் தகடூர்எறிந்த பெருஞ்சேரலிரும்பொறையை யடைந்து பாடியவர் அரிசில்கிழார். பெருஞ்சேரலிரும்பொறையின் காலம் குட்டுவன் ஆட்சியில் முற்பகுதி யாகும். உருவப்பஃறேர் இளஞ்செட்சென்னியின் காலமு மதுவே. அவன் மகனுகிய கரிகாலன் வென்றியொடு வாழ்ந்தவனுதலின், அவன் காலத்து இராஜசூயம்வேட்ட பெருநற்கிள்ளி இருந்திருக்க முடியாது. ஆதலின், அவன் கரிகாலனுக்குப் பிற்பட்டவனுதல் வேண்டும். பரணரால் பாடப்பெற்ற பசும்பூண்பாண்டியனும், ஔவையாரால்பாடப்பெற்ற உக்கிரப்பெருவழுதியும் இருவேறு மன்னரோ ஒருவரேயோ என ஆராய்ச்சிக்குரியவ ராகின்றனர்.

9. அதியமான் அஞ்சியைப் பாடிய ஔவையாரால் பாடப்பெற்றவன் நாஞ்சில்வள்ளுவன் (புறம். 140). அந் நாஞ்சில்வள்ளுவனை மருதன் இளநாகனும் பாடியுள்ளார் (புறம். 138, 139). ஔவையார் அவ் வள்ளலைப் பரிசில்விடையென்னும் துறையில் செய்யுளமைத்துப் புகழ்ந்துள்ளார். மருதன் இளநாகனர் பாணற்றுப்படையென்னும் துறையிலும், பரிசில்கடாநிலையென்னும் துறையிலும் செய்யுளமைத்துப் புகழ்ந்துள்ளார். மருதன் இளநாகனர் பாணற்றுப்படையென்னும் துறையிலும், பரிசில்கடாநிலையென்னும் துறையிலும் செய்யுளமைத்துப் புகழ்ந்துள்ளார். அவ் விளநாகனரால் பாடப்பெற்றவர் கூடகாரத்துத்துஞ்சிய மாறன்வழுதியும் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறனு மாவர். இவர்களுள் கூட

காரத்துக் துஞ்சிய மாறன்வழுதியைப் பாடியவராகிய ஐயூர்முட வனாரால் பாடப்பெற்றவன் குளமுற்றத் துத்துஞ்சியகிள்ளிவளவன். இலவந்திகைப்பள்ளித்துஞ்சிய நன்மாறனைப் பாடியவராகிய ஆவூர் மூலங்கிழாரும் அவனைப்பாடியிருக்கிறார். அந் நன்மாறனைப்பாடிய காரிக்கண்ணனார் திருமாவளவனையும் பாடியுள்ளார். திருமாவள வனையும் கிள்ளிவளவனையும் ஒருவனெனத் துணிதற் கில்லை; திருமா வளவன், குராப்பள்ளித்துஞ்சியவனெனவும், கிள்ளிவளவன் குளமுற்றத்துத் துஞ்சியவனெனவும் புறநானூற்றுப் பாடல்களின் அடிக்குறிப்புக் கூறுவதால். ஆதலின், இரண்டுபாண்டியர்களுள் கூடகாரத்துத்துஞ்சிய மாறன்வழுதி முந்தியவனாவான்; இலவந்தி கைப்பள்ளித்துஞ்சிய நன்மாறன் பிந்தியவனாவான்.

கிள்ளிவளவனைப் பாடிய நக்கீரர், பாண்டியன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறனைப் பாடியுள்ளார். (புறம். 56) இக்நக்கீர ரே, அகம். 36ல் தலையாலங்கானத்துச் செருவென்றவன் பாண்டி யன் நெடுஞ்செழியன் எனக் குறித்துளார். அகம். 57ல் அந் நெடுஞ்செழியனே முசிறிமுற்றியவனெனக் குறிக்கின்றார். அகம். 93ல் வழுதிகூடலையும் கோதையது கருவூரையும் குறிக்கின்றார். இச் செய்யுளால் நக்கீரர்காலத்தவன் சேரமான்கோதை என்பது பெறப் படும். அகம். 126ல் எவ்வி, தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் காலத்தோ அவனுக்கு முந்தியோ இருந்தவனாதல் வேண்டும் என்பது பெறப்படும். அகம். 205-வது பாட்டில் கோசரைவென்ற பொலம்பூண்கிள்ளியின் காலத்துக் காவிரிப்பூம் பட்டினம் ஓர் செழுநகராக விளங்கியது என்பது பெறப்படும். அகம். 253ல் பசும்பூட்பாண்டியன் கொங்கரையோட்டிக் கூடலில் வெற்றிவிழாக் கொண்டாடினன் என்பதும், வடுகர்பெருமானாகிய எருமையினது நாட்டது அயிரியாறு என்பதும் குறிக்கப்பட்டுள் ளன. அகம். 29ல் வெண்கோட்டியானை விறற்போர்க் குட்டுவன் குறிக்கப்படுகிறான். அகம். 340ல் பொலம்பூண் திரையனது தலை நகர் பவத்திரி எனக் குறிக்கப்படுகிறது. நற்றிணை 358ல் பசும் பூண்வழுதியென ஒருவன் குறிக்கப்படுகிறான். அகம். 93ல் குறித்த வழுதியும் இவ்வழுதியும் ஒருவரேயாவர்; ஒருபுலவராலேயே குறிக் கப்படுதலால். இவ்வழுதி கூடகாரத்துஞ்சிய மாறன்வழுதியாகலாம்.

கிள்ளிவளவனைப் பாடிய தாயங்கண்ணனார் அகம். 149ல் முசிறி முற்றிய செழியனைக் குறிக்கிறார். ஆதலின் கிள்ளிவளவனும் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனும் சமகாலத்தவராவர். நெடுஞ்செழியன் காலத்தவன் யானைக்கட்சேய் மாந்தரன் சேரலிரும்பொறை என்பது குறுங்கோழியூர்கிழார் பாடலால் விளங்கும். ஆதலின் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன், கூடகாரத்துத்துஞ்சிய மாறன்வழுதி, இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறன் ஆகியவர்கள் முறையே ஒருவர் பின் ஒருவராக அரசெய்தியவராவர். யானைக்கட்சேய்மாந்தரன் சேரலிரும்பொறை முற்பட்டவனும் சேரமான்கோதை அவனுக்குப் பிற்பட்டவனுமாவர்.

கிள்ளிவளவனது இயல்பினைப் பாடிய மாறோக்கத்து நப்பசலையார், அம் மன்னனைப்பற்றியே கையறுநிலையும் பாடியுள்ளார். கிள்ளிவளவன் வானவன் என்பானை வென்றதாகக் கூறியுள்ளார். இப்புலவரே கிள்ளிவளவனைச் செம்பியன் மருகன் எனக் குறிக்கின்றார். ஆதலின் கிள்ளிவளவனுக்கு முன்னோன் செம்பியன் என்பது பெறப்படும். புறம். 126ல் புலனழுக்கற்ற அந்தணாளன் எனக் கபிலரைக் குறிப்பதால் கபிலர் இப் புலவர்க்கு முற்பட்டவராவார். கபிலரால் பாடப்பெற்ற திருமுடிக்காரியையும் இப்புலவர் பாடியுள்ளார். ஆதலின், கபிலருக்குப் பிறகும் இப்புலவர் வாழ்ந்தவராதல் வேண்டும். செம்பியனை வென்றவன் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் ஆவன். ஆதலின், மாமூலனார் காலத்து இறுதியிலோ அவருக்குப் பிறகோ இருந்தவனவன் இந் நெடுஞ்செழியன்; மாமூலனார் செம்பியன்செய்தியைக் கூறுவதனால். மாங்குடிமருதனார் மதுரைக்காஞ்சியில் இந் நெடுஞ்செழியன் சேனைத்தலைவன் மாறன் எனக் குறிக்கின்றார். கிள்ளிவளவன் கூடலாங்கண் பழையன்மாறனைப் போரிற் சாய்க்கக் கோதைமார்பன் மிக உவந்தான் என அகம். 346ல் நக்கீரர்

குறிக்கின்றார். ஆதலின், நக்கீரர்காலத்துச் சோழன், செம்பியனுக்குப் பிற்பட்டவனான கிள்ளிவளவனாவன். இவன் பொலம்பூண் கிள்ளி எனவும் குறிக்கப்படுகின்றான். இக்காலத்துப் பாண்டிய மன்னர் நெடுஞ்செழியனும் வழுதியுமாவர்; சேரமன்னன் கோதையாவன். இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறனைப் பாடிய பேரிசாத்தனார் இராஜசூயம்வேட்ட பெருநற்கிள்ளியும் யானைக்கட்சேய் மாந்தரன்சேரலிரும்பொறையும் பொருத செயலைக் கூறுகின்றார். ஆதலின் இராஜசூயம்வெட்டபெருநற்கிள்ளி, கிள்ளிவளவனுக்கு முற்பட்டவனாதல்வேண்டும். இராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் கிள்ளிவளவனும் ஒருவனேயோ என ஐயறவும் இடனுண்டு; ஆராய்தற்குரியது.

10. கிள்ளிவளவன்காலத்தவராகிய கோதையைப் பாடிய மாடலன்மதுரைக்குமரனார், சேட்சென்னிநலங்கிள்ளியைப் பாடியுள்ளார். இந் நலங்கிள்ளியைப்பாடிய பிற புலவர்கள் ஆலத்தூர்கிழாரும் கோவூர்கிழாரும் ஆவர். இவ்விருவரும் கிள்ளிவளவனைப் பாடியுள்ளனர். கோவூர்கிழாரும் மாடலன்மதுரைக் குமரனாரும் திருமாவளவனைப் பாடியுள்ளனர். அத் திருமாவளவனைப் பாடிய காரிக்கண்ணனார் இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறனையும், வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியையும் பாடியுள்ளார். ஆதலின் இப் பெருவழுதி நன்மாறனுக்குப்பின்னோனாவன் என்பது மேற்கூறியவைகளிலிருந்து தானே போதரும். ஆதலின், கிள்ளிவளவனுக்குப்பின் சேட்சென்னி நலங்கிள்ளியும் அவனுக்குப் பின் திருமாவளவனும் அரசெய்தியவராதல் வேண்டும். அல்லது கிள்ளிவளவனும் நலங்கிள்ளியும் சமகாலத்தவராதல் வேண்டும். இனி, பிறர்கொள்கைபற்றி ஆய்வாம்.

[தொடரும்.]

தமிழ்மொழி

திரு. இராமசுப்பிரமணிய நாவலரவர்கள், தக்கலை.

(237-ம் பக்கத்தொடர்ச்சி.)

எழுத்தமைதி

எல்லா மொழிகளிலும் உயிர்மெய் இரண்டினும் ஒற்றுமை காணப்படுகின்றது. சிலமொழிகளில் அவை எண்ணின் மிகுந்துள்ளன. தமிழில் அமைந்துள்ள உயிர்கள் பன்னிரண்டும் மெய்கள் பதினெட்டும் எளிதில் ஒலிக்கப்படும் இயல்பு வாய்ந்தவை. வடமொழியைப் பின்பற்றிய மொழிகள் எல்லாம் ஜ ஷ ஸ ஹ முதலிய சிறப்பெழுத்துக்களைக் கொண்டுள்ளன.

வடமொழிச் சிறப்பெழுத்துக்களைத் தமிழிற் காணுமையால், தமிழ் வடமொழிவழிப் பிறந்ததன்று என்பது வலியுறும். தமிழ் வழிப் பிறந்த மலையாளம் இன்று வடமொழிச்சிறப்பெழுத்துக்களைக் கொண்டு உலவுகின்றது. வடமொழிச்சொற்களைப் பண்டைத் தமிழர் எழுதிவந்ததுபோலவே மலையாளிகளும் எழுதிவந்தனர். அரசன், கணபதி, விக்கினம், நாதன் முதலிய சொற்களைக்காண்க. இன்னோரன்னவை பல 'இராமசரிதம்' என்னும் பழைய மலையாள நூலிற் காணப்படுகின்றன. தமிழ் இன்றளவில் பிறமொழி எழுத்துக்களை வேண்டாது தனக்குரிய இனிய ஒலியை உடைய முப்பத்து மூன்று எழுத்துக்களை மட்டுங்கொண்டு அவற்ருல் ஆக்கப்பட்ட புகழமைந்த பேரிலக்கண இலக்கிய நூல்களோடு மிளிர்கின்றது.

தொல்காப்பியர், வடசொல்லாட்சிக்கண், வடமொழி தமிழ்மொழி இரண்டினும் ஒத்த பொதுவெழுத்து மொழிகளையே தமிழில் மேற்கொள்ளுமாறு கூறிக் காலத்தால் பயிலுஞ் சொற்களையுந் தழுவவேண்டி 'சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்' என வடமொழிச்சிறப்பெழுத்து மொழிகளையும் தமிழ்வடிவிற் கொள்க

என்பர். 'இயைந்தன' என்பதனால் தமிழ் அமைதிக்கு ஒவ்வாதவற்றை விலக்கித் தமிழெழுத்துக்களாலேயே கூறுக என்பது பெற்றாம். இவ்விலக்கணத்தான் வட்டம் ஆணை நட்டம் (நடனம்) முதலியன தமிழெழுத்தால் நடத்தலிற் றழுவிக்கொள்ளப் பெறும். பயணம் (பிரயாணம்) கண்ணாலம் (கலியாணம்) முதலியன பிற்கால வழக்கு.

தமிழின் சிறப்பெழுத்துக்கள் ற ன ழ எ ஒ ஃ குற்றியலிகரம் குற்றியலுகரம் என்பவை. இவற்றால் வருஞ் சொற்களை வடமொழியில் எழுத இயலாது. ளகரமும் தமிழ்ச் சிறப்பெழுத்தெனல் வேண்டும். லகரத்தை ளகரமாகவும் ஆளும் வழக்கு வடமொழியில் பிற்காலத்து ஏற்பட்டது, தென்னாட்டவரே பெரும்பாலும் வடமொழியில் ளகரத்தை மேற்கொண்டு வருகின்றனர். 'லளயோ ரபேத:' என்பது வடமொழி இலக்கணம். லகரத்துக்கும் ளகரத்துக்கும் வேற்றுமையில்லை என்பதனால் ஓரெழுத்திற்கே ஈரொலி கொண்டார் எனப்படும். லகர முதற்கண் வந்தமையால் ளகரம் வடமொழிக்குரியதன்று என்பதும் தமிழர் கூட்டுறவால் அது பின்னர்ப் புகுந்தது என்பதும் வெளிப்படை. இக்காலத்தவர் வரிவடிவிலும் வடமொழிக்கு ளகரம் படைத்துள்ளனர். பாதலம்-பாதாளம், தலம்-தளம், பிரவாலம்-பிரவாளம், காலகூடம் - காளகூடம் முதலியவற்றுள் லகரளகரங்கள் ஒத்து வழங்கிவருகின்றன. ஸ்தலம் பலம் சீலம் முதலியவற்றில் ளகாம் வாராது. இவற்றைத் தமிழரும் இவ்வாறே ஒலிப்பர். எனவே, தமிழர் ளகரமாக்கிய லகரங்களே வடமொழியினும் ளகரமாக ஒலிக்கின்றன என உய்த்துணரலாகும்.

ஆய்தம் ஃ தமிழில்மட்டுமே காணப்படுகின்றது. உயிரெழுத்து முடிபிற்கும் மெய்யெழுத்துத் தொடக்கத்திற்கும் இடையே, அவ்விரண்டு வகை எழுத்துக்களுக்குமுரிய உறுப்புக்களின் இடையே உயிரையும் மெய்யையும் இணக்குவதுபோன்று நிலவும் ஆய்தம் தமிழுக்கு ஒரு தனிச் செல்வம் எனலாம்.

தமிழின் எழுத்துக்கள் (நெடுங்கணக்குவரிசை) பிறப்பிட முறையே முறையாக அமைக்கப்பட்டுள்ளன. வல்லினம் மெல்லினம் இடையினம் என்னுமூன்றும் நாக்கின் அடிநின்று நுனிவரை தொடர்பாகவரும் எழுத்து அமைதி உடையன. கசடதபற, ஙஞ ணநமன, யரலவழள என்பவற்றை ஒலித்து ஒவ்வோரினமும் நாக்கின் அடிதொடங்கி நுனிவரை இயங்கிவந்து முடிவது காண்க. கங சஞடணதநபம என்பன நாக்கின் அடிதொடங்கி இதழிரண்டும் உறுவதொடு முடிவுறும். யரலவழள என்பன மீண்டும் நாக்கின் அடிதொடங்கி நாக்கின் நுனிக்கடுத்து முடிவுறும். றனக்கள் நாக்கின் எகரந்தோன்றும் இடத்துக்கும் முற்பட்டு நுனியிடமாக வருவதனல் இறுதியில் அமைக்கப்பெற்றன. றனக்கள் தமிழ்ச் சிறப்பெழுத்து என்பதுபற்றி இறுதியில் வைக்கப்பட்டன என்னுங் கூற்றுப் பொருந்தாது. உயிரெழுத்துக்களிலும் இடமும் முயற்சியின் மிகுதியும் கருதி முறையமைக்கப்பட்டது. சிறப்பெழுத்துக்களை இறுதியில் வைப்பது கருத்தாயின், எ ஒ முதலியனவும் இறுதியில் வரவேண்டுமே. அன்றியும் வடவெழுத்துக்கள் தோன்றுவதன்முன் தமிழ் எழுத்துக்கள் முறை மயங்கிக்கிடந்தன எனவும் வேண்டும். தமிழ் எழுத்துக்கள் தமிழர்க்குரிய ஒலியியல்பாற் பிறந்தன. அவை வடவெழுத்துள் சிலவற்றை நீக்கி அமைக்கப் பட்டன அல்ல என்க.

தமிழின் ஒலிகள் வருந்தி ஒலிக்கப்படவேண்டுவதில்லை. அவை இயல்பாகவே இதழ் நாக்குப் பல் அண்ணம் என்னும் நான்கு உறுப்புக்களின் எளிய முயற்சியால் உரம் மிடறு மூக்கு தலை என்னும் நான்கையும் இடமாகக்கொண்டு பிறக்கின்றன. பிறமொழிகட்கும் இவ்வெட்டுமே ஒலிக்குரிய உறுப்புக்களாயினும், அவற்றின் ஒலிகள் மிகுந்த முயற்சியால் பிறக்கின்றன. நாக்கு முதலிய உறுப்புக்களை நன்கு வளைத்தல் அழுத்தல் தேய்த்தல் சுரித்தல் முதலிய கடுமுயற்சிகளால் பிறக்கும் எழுத்துக்கள் வடமொழி அரபி உருது

இந்தி முதலியவற்றில் உள. மொழி எப்பொழுதும் வழங்குவதற்கு உரியதாகலின், அஃது ஒலிப்பதற்கு எளிதாயிருப்பதே நன்றாம்.

வட்டெழுத்துக்களுக்கும் இக்காலத் தமிழ் எழுத்துக்களுக்கும் மிக்க ஒற்றுமை உண்டு. ஆயிரம் யாண்டுகட்கு முன்னிருந்தே வட்டெழுத்து உள என்று சிலரும் வட்டெழுத்தே தமிழ்எழுத்து என்று சிலரும் கூறுவர். வட்டெழுத்து என்ற வழக்குத் தமிழ் இலக்கண நூல்களில் யாண்டும் கூறப்படவில்லை. தமிழெழுத்தைத் தமிழெழுத்து என்னுமல் வட்டெழுத்து என்று கூறவேண்டுவதும் இல்லை. வட்டெழுத்து என்பதற்கு வட்டமாகிய எழுத்து வட்டுப் போன்ற எழுத்து வட்டால் எழுதப்படும் எழுத்து என்பன பொருள்களாம். அல்லது ஒருவட்டத்தில் (எல்லையில்) வழங்கப் படும் எழுத்து என்பதும் பொருந்தும். வட்டெழுத்து மலைநாட்டில் மிகுதியாகப் பயின்றிருக்கின்றது. வட்டெழுத்துக்குப்பின் மலையாண்மை எழுத்தும் அதன்பின் மலையாள எழுத்தும் தோன்றின. இக்கால மலையாளஎழுத்துத் தமிழும் கிரந்தமும் கலந்து நடப்பது.

வட்டெழுத்து மலையாள எழுத்தமைதிக்குச் சிறிது பயன் செய்திருக்கின்றது. ஆயின் அது தமிழ் எழுத்தன்று என்பதும் தமிழினின்றுந் தோன்றியது என்பதும் துணியப்படும். வட்டம் வட்டு என்பன விருத்தம் என்ற வடசொல்லின் திரிபாகக் கூறுவர்.

தமிழ் எழுத்துக்களை எளிதாக மாற்றவேண்டுமெனச் சிலர் கூறிவருகின்றனர். மொழிகளில் நெடுங்கால வழக்காய் வருவதனை மாற்றுவதனல் பல இடர்ப்பாடுகள் தோன்றும். சிறப்பிற்ருக அமைந்த ஓர் எழுத்துமுறையை மாற்றவேண்டும் விழைவும் நன்ருகாது. தமிழ் எழுத்துக்கள் திருந்திய வடிவங்கள். அவற்றை எளிமைப் படுத்தும்பொருட்டு ஆங்கிலம் போலவோ அரபி போலவோ எழுத முனைவதேன்? ஒரு நாட்டாருடைய எழுத்துக் களும் ஓவியங்களும் அன்னருடைய உள்ளப்பான்மையை உணர்த் தும் சான்றுகளாகும்.

---

* (இலக்கியத்தில் நகைச்சுவை)

சி லே லை டை

T. N. கிருஷ்ணையங்கார் அவர்கள், தமிழ் ஆராய்ச்சியாளர்,
திருவாங்கூர் யூனிவர்ஸிட்டி.

நாவினுல் நுகர்ந்து அறியப்படுகிற உணவுப்பொருள்களின் சுவைகள் ஷட்ரஸம் என ஆறுவகைப்படும். இவைபோல நாடக இலக்கியங்களில் மனத்தினுல் நுகர்ந்து அநுபவித்து அறியப்படுகிற சுவைகளும் உள. இவை அச்சம், அவலம், இளிவரல், சினம், வீரம், நகை, இன்பம், அற்புதம் என எட்டாம். இவற்றெடு சாந்தம் என்பதனையும் கூட்டி ஒன்பதுசுவை என்பர் தமிழ்வல்லார். வடநூலார் இவற்றை பயம், கருண, குப்ஸை, ரௌத்ரம், வீர்யம், ஹாஸ்யம், ச்ருங்காரம், அத்புதம், சாந்தம் என நவரஸங்களென்பர். இவற்றுள் நகைச்சுவை அல்லது ஹாஸ்யம் என்பது, உணவுப்பொருள்களில் உப்புச்சுவை இன்றியமையாததுபோல, நாடக இலக்கியங்களுக்கு மிகவும் இன்றியமையாததாகும். இந் நகைச்சுவையை, வஞ்சகப்புகழ்ச்சி சிலேடை முதலான அணிகளொடு சேர்த்துப் புலவர்கள் பாடுவது உண்டு. இவற்றுள் சிலேடையணியில், இந் நகைச்சுவைதோன்றப் பாடப்பெற்ற பாடல்கள் நாம் கண்டு இன்புறத்தக்கன.

சிலேடைக்கவி என்பது, ஒருபொருளின் குணங்களைக் கூறி அச் சொற்றொடரையே வேறுபடப் பிரித்தும் பிரியாமலும் பிறிதோர்பொருளின் குணங்களும் அத்தொடரிலேயே தோன்றும்படி பொருளமைத்துக் காட்டி, இவற்றுல் இவை தம்மில் ஒப்பாகும் என முடித்துப் பாடுதலாகும்.

---

* இது 4—8—52ல் அகில இந்திய வானெலி நிலயத்தில் பேசியது அந்நிலயத்தார் அநுமதியுடன் வெளியிடப்படுகிறது.

இச்சிலேடைக்கவிகளை இப்பொழுது நாதன்கோவில் என்று வழங்குகிற நந்திபுரத்து, கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டில் தோன்றியவரும், வரதன் என்னும் இயற்பெயரையுடையவருமான காளமேகப்புலவர், அவர்காலத்துத் திருமலைராயன் பட்டினத்திலிருந்து அரசுபுரிந்தவனும் கொடையாளியுமான சாளுவத் திருமலைராயன் வேண்ட, அவன் முன்னிலையில் பாடியுள்ளார். இவற்றுட்சில இங்குக்கூறுகிறேன்.

யானைக்கும் ஆமணக்குக்கும் சிலேடை:—

முத்திருக்கும் கொம்பசைக்கும் மூரித்தண் டேந்திவரும்
கொத்திருக்கும் நேரே குலைசாய்க்கும்—எத்திசைக்கும்
தேமணக்கும் சோலைத் திருமலைரா யன்வரையில்
ஆமணக்கும் மால்யானை யாம்.

இதில், யானை முத்துக்களுக்குப் பிறப்பிடமான தன் கொம்புகளுடன் அசைந்தும் தனக்கு உணவுப்பொருளுடன் பெரிய மரத்தடிகளை ஏந்திக்கொண்டும் எதிரேவந்து பகைவரை நடுங்கச் செய்யும்; என்னும் பொருளோடு ஆமணக்கு, முத்துக்களைத் தாங்கி நின்று, தன்கொப்புக்கள் ஆடும்படி காம்போடுகூடிய திரள்திரளான பூங்கொத்துக்களுடன் இருக்கும்; என்னும் பொருளும்பெறச் சொற்றொடரையமைத்து இவற்றால், பெரிய யானையும் சிறிய ஆமணக்கும் ஒப்பாகும் என்று நகைச்சுவை தோன்றப் பாடிய நயம் அறிக.

இன்னும் முகுந்தனுக்கும் முறத்துக்கும் சிலேடை:—

வல்லரியாய் உற்றிடலால் மாதர்கையிற் பற்றிடலால்
சொல்லரிய மாப்புடைக்கத் தோன்றுதலால்—வல்லோர்
அகந்தனிலே வாழ்தலினால் அன்றுலக ளந்த
முகுந்தனுமொப் பாவான் முறம்.

இதில், வலிமைபொருந்திய நரஸிம்மமாகியும் கிருஷ்ணாவதாரத்து ஆயர்பாடியில் வெண்ணெய் திருடியுண்டபொழுதும் குரவைக் கூத்தாடின பொழுதும் பெண்கள் கையாற் பற்றும்படியும்,

எப்பொழுதும் இலக்குமிதேவி மனம்பூரிக்கும்படியும், பக்தர்கள் உள்ளத்தில் தங்கியும் விஷ்ணு தோன்றுதலால் எனவும்; பெண்கள் கையிற்பற்றி அரிசி முதலிய தானியங்களை வாரியும், நெல் அரிசி மா முதலியவை பாற்றும்படியும் வீடுதொறும் முறம் காணப்படுகையால் எனவும், பொருள்தரச் சொற்றொடரை அமைத்து முத்தி கொடுக்கும் முகுந்தன், பதர்கொழிக்கும் முறத்துக்கு ஒப்பாவான் என நகைச்சுவைபெறக் காட்டிய நயம் அறிக.

இன்னும் தேங்காய்க்கும் நாய்க்கும் சிலேடை:—

ஓடும் இருக்கும்அதன் உள்வாய் வெளுத்திருக்கும்
நாடும் குலைதனக்கு நாணாது—சேடியே!
தீங்கான தில்லாத் திருமலைரா யன்வரையில்
தேங்காயும் நாயெனவே செப்பு.

இதில், தேங்காயினுள்ளே சிரட்டையிருப்பதுடன், உடைத்துப் பார்த்தால், அதன் உட்புறம் வெளுத்திருப்பதோடு அவை குலையில் இருக்கும்பொழுது எண்ணிக்கைக்கு அடங்காமலிருக்கும் எனவும்; நாயும் ஓடுதல் இருத்தல் செய்தும் அதன் வாயினுள்நிறம் வெளுத்தும் திருடரைக்காணின் ஓயாமல் குரைத்தும் இருக்கும் எனவும், பொருள்படச் சொற்றொடர் அமைத்து, மங்கலப் பொருளான தேங்காய் நாயை ஒப்பாகும்என, நகைச்சுவை தோன்றப் பாடியிருத்தல் அறிக.

இன்னும் பரமசிவனுக்கும் பூசுணிக்காய்க்கும் சிலேடை:—

அடிநந்தி சேர்தலினல் ஆகம் வெளுத்துக்
கொடியுமொரு பாகத்திற் கொண்டு—வடிவுடைய
மாசுணத்தைப் பூண்டு வளைத்தழும்பு பெற்றதனுல்
பூசுணிக்காய் ஈசனெனப் போற்று.

இதில் எப்பொழுதும் நந்திதேவராற் பாதஸேவை செய்யப்பெற்றும், விபூதியணிந்து மேனிவெளுத்தும், உமாதேவி யொருபாகத்தி லுறைந்தும், ஸர்ப்பத்தை பூஷணமாகக்கொண்டும், முன்ன

மொருபெண் அணைத்ததனால் வளைத்தழும்பு கொண்டும், எனப் பரமசிவன் குணங்களும்; காம்புடன் சேர்ந்தும், வெள்ளைநிறத் தோடும், படர்கொடி கொண்டும், மீதே சாம்பல் பூசினாற் போன்றும், வளைந்த குழிவொடு பொருந்தியும் எனப் பூசுணிக்காயின் குணங்களும் ஒருங்குதோன்றச் சொற்றொடரை அமைத்து, இவற்றால் அழிவில்லாத பரமசிவன், அழியுமியல்புள்ள பூசுணிக்காய் போன்றவன் என நகைச்சுவை தோன்றப் பாடியது காண்க. இவை காளமேகப்புலவர் பாடியனவாம்.

இனி, தாம்பிரபர்ணி தீரத்து நவதிருப்பதியைச்சேர்ந்த தென்திருப்பேரை என்னும் ஊரில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றி அபிநவகாளமேகம் என பிருதுப்பெயர் பெற்றவரும் எனக்கு அம்மானுமான ஆசுகவி ஸ்ரீ அனந்தகிருஷ்ணையங்கார் அவர்களை நண்பர் சிலர் வேண்ட அவ் ஆசுகவியவர்கள் நம்மாழ்வாரை முன்னிலைப்படுத்திப் பாடிய சிலேடைகளிற் சில இங்குக் கூறுகிறேன்.

திருமாலுக்கும் தேங்காய்க்கும் சிலேடை:—

பாலுறலால் அங்கோடு பற்றுகையால் இங்கேளக்
காலமுமே உள்ளீரம் காணுதலால்—ஞாலமதில்
கல்லுக் குடைகொளலால் கண்ணனையே தேக்காயாய்
எல்லொக்கும் மாறா! இயம்பு.

இதிற், பாற்கடலிற் சேர்தலும், அழகிய சங்கத்தைக் கையிற் கொண்டிருத்தலும், எப்பொழுதும் அன்பொடு காணப்படுதலும், கோவர்த்தனம் என்னும் மலையைக் குடையாகப் பற்றுதலும் ஆகியவை கண்ணனுக்கும்; தேங்காய்ப்பால் உறுதலும், சிரட்டையோடு இருத்தலும், எப்பொழுதும் குளிர்ந்து இருத்தலும், கல்லுக்கு உடைபடுதலும் தேங்காய்க்கும் பொருந்தச் சொற்றொடர்களமைத்து, உயிர்களுக்குக் கண்போன்ற திருமால், கண்கள் மூன்றிருந்தும் காணுதலைச்செய்யாத தேங்காய் போல்வான் என நகைச்சுவை தோன்றப் பாடிய நயம் அறிக.

இன்னும் கந்தனுக்கும் பச்சைமிளகாய்க்கும் சிலேடை:—

பார்க்கவிதை உட்கொள்ளலால் பன்பாமுன் னுலுகையால்
தீர்க்க வரைபடவே செய்திடலால்—ஆர்க்குமெழிற்
சந்தையிலும் மேவுகையால் சாருதலால் ஆங்காரம்
கந்தனிகர் பச்சைமிள காய்.

இதில் கந்தன் அருணகிரியார் போன்றவர்களின் கவிதைகளை இப்புவியில் ஏற்றுக்கொண்டும், பன்னிரண்டு கைகளோடு கூடியும், மிகப்பெரிய கிரௌஞ்ச கிரியை வேலினல் ஊடுருவச் செய்தும் சந்தனத்தையும் வேலாயுதத்தையும் மாலேகளையும் தரித்துக் கொண்டும் இருப்பதால் எனவும்; பச்சைமிளகாய், தன்னுள் விதைகளை அடக்கிக்கொண்டும் செடியில் தொங்கிக்கொண்டும், மசியும்படி அரைபடவும் வியாபாரஸ்தலத்தில் மேவியும் காரமான சுவையுடனும் இருப்பதால் எனவும், பொருள்படச் சொற்ருெடரமைத்து ஓங்காரத் துட்பொருளுணர்ந்து உபதேசித்த ஸ்கந்தன், ஆங்காரத் துடனிருக்கும் பச்சைமிளகாய் போல்வான், என நகைச்சுவை தோன்றப் பாடியது காண்க.

இன்னும் பரமசிவனுக்கும் செக்குக்கும் சிலேடை:—

ஆடுதலால் அப்போ தரவம் படிந்திடலால்
மாடுளதால் செட்டி மருங்குறலால்—நாடதனில்
மிக்க கனமுறலால் மேன்மைவகு ளாபரணு!
செக்குநிக ராஞன் சிவன்.

இனி, சிவன் நடனமாடுதல், புஷ்பத்தையும் ஸர்ப்பத்தையும் சூடுதல், இடபவாகனமுடையவனுக இருத்தல், முருகன் பக்கத்திலிருத்தல், மேன்மைபெறுதல் ஆகிய இவற்றை யுடையவன் என்றும்; செக்கு ஆடுதல், அப்பொழுது சப்தமுண்டாதல், காளைகளும் செக்காஞம் இருத்தல், மிக்க பாரமுள்ளதா யிருத்தல், ஆகிய இவற்றையுடையது என்னும் பொருள்படச் சொற்ருெடரமைத்து, ஆனந்தக்கூத்து ஆடும் அருட்பெருங் கடலாகிய பரமசிவன், திலகாதகக் கருவியாய் ஆடும் செக்கு நிகராவான்; என நகைச்சுவை தோன்றப் பாடியது அறிக.

இன்னும் ஊசிக்கும் கோபுரத்துக்கும் சிலேடை:—

அம்பரத்தை நாடுதலால் ஆங்கூர்மை சேருதலால்
அம்புவியில் நூல்விவரம் ஆர்ந்திடலால்—வம்புமகிழ்
மாபுரத்தி லேதிகழும் மாறு!நின் ஆலயத்துக்
கோபுரத்தை ஊசியெனக் கூறு.

இதில், கோபுரம் ஆகாசத்தை யளாவி உயர்ந்தும், ஆங்கு ஊர்கின்ற மேகங்கள் தவழ்ந்தும், சிற்பசாத்திர விதிப்படி அமைந்தும் எனவும்; ஊசி வஸ்திரத்தைச் சேர்தலும், கூர்மையாக இருத்தலும், நூல்நுழையும் துவாரத்தோடு அமைதலும் எனவும், பொருள்பெறச் சொற்றொடரமைத்து மிகப்பெரிய கோபுரம், மிகச்சிறிய ஊசியை நிகர்க்கும்; என்று நகைச்சுவை தோன்றப் பாடியிருத்தல் காண்க.

இன்னும் கருடனுக்கும் திருடனுக்கும் சிலேடை:—

எப்பணியும் தூக்குதலால் என்றும் சிறையுறலால்
இப்புவியோர் முன்பாவி என்பதனுல்—செப்புபுகழ்ச்
சக்கிரிபாற் கைகூப்பித் தாழ்ந்திடலால் நாவீறு!
தக்ககரு டன்திருடன் தான்.

இதில், கருடன் எந்தப்பாம்பையும் அஞ்சாமல் தூக்குதல், எந்நாளும் சிறகுள்ளவனுக இருத்தல், பக்ஷிராஜனுக இருத்தல், சக்ராயுதத்தையுடைய விஷ்ணுவினிடத்துக் கைகூப்பித் தொழுது நிற்றல், இவையுடையனுதலும்; திருடன் எந்த ஆபரணங்களையும் திருடியெடுத்தல், எந்நாளும் இருத்தல், உலகத்தோரால் பாவி எனப்படுதல், தண்டனைசெய்யும் அரசனிடத்துக் கைகூப்பித் தொழுதல் இவையுடையனுதலும் தோன்றச் சொற்றொடர் அமைத்து, பெரிய திருவடி என்னும் புகழ்ச்சிக்குரிய கருடன் இகழ்ச்சிக்குரிய திருடனைப்போல்வான்; என நகைச்சுவைதோன்றப் பாடியிருத்தல் அறிக.

இன்னும் வேம்புக்கும் ஸ்டாம்புக்கும் சிலேடை:—

மிக்க விலைபெறலால் வெண்டரையும் மேவுதலால்
தக்க அரசுத் தலையுறலால்—பக்கமதாய்ப்
பத்தர் பணியும் பராங்குசனே! அச்சுமுகர்ப்
பத்திரமே வேப்பமரம் பார்.

இதில், வேம்பு மிகுதியான இலைகள் தழைத்தும், வெண்தரையில் வளர்ந்தும், அரசமரத்தொடு பொருந்தியும் இருப்பதால் எனவும்; ஸ்டாம்பு மிகுதியான விலைமதிப்புப்பெற்றும், வெண்டர் என்னும் ஒருவனால் கையாளப்பட்டும் அரசனின் தலைபொறிக்கப் பெற்றும் இருத்தலால் எனவும் பொருள்பெறச் சொற்றொடர் அமைத்து, அரசத்தலை பொருந்தி வலஞ்செய்து வணங்கப்படுகிற வேம்பு, அரசுத்தலை பொருந்தியும் வணங்கப்பெறாத ஸ்டாம்பு போல்வது என்று, நகைச்சுவைதோன்றப் பாடியது காண்க.

இன்னும் வயலுக்கும் குயிலுக்கும் சிலேடை:—

அங்கம் கறுப்பால் அதுமா விலைகொளலால்
எங்கெங்கும் சத்தம் இடுகையினால்—கங்குல்பகல்
காக்கையினா லேவளரக் காண்கையால் மாறா!நல்
வாக்குக் குயிலாம் வயல்.

இதில், வயல் அங்கு அங்கு கதிர் அறவடையாதலாலும், மிக்க விலைமதிப்புப் பெறுதலாலும், எங்கும் கூலியாக நெல் அளந்து இடுதலாலும், இரவு பகல் ஆடுமாடுகள் மேயாமல் காவல்செய்வதனால் பயிர்கள் வளருவதாலும், எனவும்; குயில் கறுத்த சரீரமுடையதாதலாலும், மாந்தளிராகிய இலையை உணவாகக் கொள்ளுதலாலும், எங்கும் ஓசையுறக் கூவுதலாலும் இராப்பகல் காக்கையின் கூட்டிலேயே, அதனால் வளர்க்கப்படுதலாலும் எனவும்; பொருள்பெறச் சொற்றொடரமைத்து மிக்க விலைமதிப்புடையதாக அமைந்திருக்கும் வயல் கூவித்திரியும் குயில் போல்வது என்று நகைச்சுவை தோன்றப் பாடியிருத்தல் காண்க.

இன்னும் ஒருசெய்யுளிலேயே, மூன்று பொருள்களுக்கும், நான்கு பொருள்களுக்கும், ஐந்து பொருள்களுக்கும் ஒப்புமை காட்டிச் சிலேடைகள் பல பாடப்பெற்றுள்ளன. அவற்றை விரிக்கிற் பெருகும். ஆதலால், இங்ஙனம் நகைச்சுவைபோன்ற பல சுவைகளும் தோன்றப் பலவகை யணிகளில் பலசெய்யுட்களை நம் முன்னோர் பாடியுள்ளார் என்பதை உணர்ந்து, தற்காலத்து நாம் புதிதாக நூல்கள் இயற்றுவதுடன், பழைய நூல்களாகிய பொக்கிஷங்களையும் அழியாமற் போற்றி வருவோமாக.

மதிப்புரை.

1. பூமகள்மாலை:—[திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்க வெளியீடு 38. பதிப்பாசிரியர்—திரு. ப. ரெ. திருமலைஐயங்காரவர்கள். விலை—இல்லை. பெறும் இடம்—ஆநந்தபிருந்தாவநம் ஸ்ரீமௌன சுவாமிகள் மடத்துத்தெரு, அம்பத்தூர்.]

ஸ்ரீகூரத்தாழ்வான் அருளிச்செய்த 'ஸ்ரீஸ்தவம்' என்னும் வடமொழி ஸ்தோத்ரம் இது. இதன் சுலோகங்கள் தமிழ் எழுத்திலேயே அச்சிடப்பட்டு, பதவுரையும் கருத்துரையும் தெளிவா எழுதப்பெற்றுள்ளன. வடமொழிவல்லரல்லாத தமிழரும் இப் புத்தகத்தால் மிக்க பயன்எய்துதல் கூடும்

2. பெரியபிராட்டியார்மாலை:—[இதுவும் திருவல்லிக்கேணி தமிழ்ச்சங்கவெளியீடு 41. பதிப்பாசிரியர், திரு. ப. ரெ. திருமலை ஐயங்காரவர்களே. விலை—இல்லை. பெறும் இடம், ஷை ஆநந் பிருந்தாவநம் மௌனசுவாமிகள் மடத்துத்தெரு, அம்பத்தூர்.]

ஸ்ரீ ஆளவந்தார் அருளிச்செய்த 'சதுஸ்லோகீ' என்னும் ஸ்தோத்ரரத்நம் இது. இப்புத்தகத்திலும் வடமொழி சுலோகங்கள் தமிழ் எழுத்தில் அச்சிடப்பட்டு, தெளிவான பதவுரை, பொழி புரை, விசேடவுரைகளோடு விளங்குகின்றன. முகவுரை மி நுணுகிய ஆராய்ச்சித் திறமையுடன் எழுதப்பட்டிருக்கிறது அதனுல் பெரியபிராட்டியாரான ஸ்ரீலெக்ஷ்மியின் பெருமை இனி விளங்குவதோடு, ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய உண்மைகள் பலவு ஆங்காங்கு விவரமாக அறிந்துகொள்ளுமாறு தெளிவாக்க பட்டுள்ளன.

இவ்விரண்டு புத்தகங்களும் பிழையறப் பரிசோதித்து, மி அழகுறப் பதிக்கப்பெற்றவை. இவற்றை இங்ஙனம் நன்கு அ சிட்டு உதவுமாறு, ஆசிரியருக்குப் பொருளுதவிபுரிந்து ஊக் மளித்த பரோபகாரிகளின் பெருந்தகைமை பாராட்டற்பாலது.